**கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு 2020 ஆம் வருடத்துக்காக விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளின் கவனத்துக்கு.**

**2018 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (உ.தர) பெறுபெறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிலுனர்களை ஆட்சேர்த்தல் - 2020**

1. ஒவ்வொரு பாடநெறிக்கும் மொழிமூலங்களுக்கு அமைய மாவட்ட அடிப்படையில் முதல் சுற்று நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படும் வெட்டுப்புள்ளிகள் இங்கே காட்டப்பட்டுள்ளன.

2. **வெட்டுப்புள்ளிகளுக்கான அட்டவணைகளை ஆராய்வதற்கு முன், பின்வரும் விடயங்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, சிறந்த விளக்கம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.**

3. அது தொடர்பில் கவனமின்றி, தமது Z புள்ளி தொடர்பில் மட்டும் கவனம் செலுத்தி தமக்கு வாய்ப்பு கிடைக்காமை தொடர்பில் கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் விசாரிப்பதை இயன்றளவு இழிவளவாக்கிக் கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு விசேடமாக அறியத்தரப்படுகின்றது.

4. ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான க.பொ.த (உ.தர) பாடத்துறைக்கு மற்றும் உரிய பாடத்துடன் கூடிய விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் கணினி தரவுகளை ஒட்டி தெரிவு செய்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். மாவட்டத்துக்கு அமைய, பாடநெறிக்கு விசேடமான வெவ்வேறு தகைமைகள் அடிப்படையில், வெவ்வேறு கோட்டா பெறுமானத்தின் கீழ் ஆட்சேர்க்கப்படும் போது அதற்கமைய வெட்டுப்புள்ளி Z பெறுமானம் மாறுபட்டிருக்கக்கூடும்.

5.
   - உடற்கல்வி பாடநெறிக்கு மாவட்ட அடிப்படையிலான விண்ணப்பதாரர்கள் தொடரறா முறையியல் (Online system) மூலம் விண்ணப்பிக்கும் போது வர்த்தமானி அறிவிப்பை வாசித்து புரிந்துகொள்வதன் அடிப்படையில் குறிக்கப்பட்ட விளையாட்டுப் புள்ளிக்கு அமைய வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்படுகின்றன.
   - இருப்பினும், நேர்முகப்பரீட்சையின் போது, விளையாட்டுச் சான்றிதழ்கள் நன்கு ஆராயப்பட்டு, அதன் போது விண்ணப்பதாரிகளின் விளையாட்டுப் புள்ளிகள் திருத்தப்பட்டு, அதன்படி குறிப்பிடப்பட்ட சரியான விளையாட்டின் புள்ளி தொடரொழுங்கு வரிசைக்கு அமைய உரிய வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

6. ஆங்கிலப் பாடநெறியில் 04.09.2020 ஆம் திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி பின்வரும் தொடரொழுங்கு வரிசையில் மாவட்ட அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டுள்ளதோடு, Z வெட்டுப்புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் உரிய வெற்றிட எண்ணிக்கைக்கு சமனாகுமாறு அழைக்கப்பட்ட இறுதி விண்ணப்பதாரரின் Z புள்ளியாகும்.

   தொடர்புடைய தொடரொழுங்கு வரிசை பின்வருமாறு.

i. 2018 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (உ.தர) தேர்வில் ஆங்கில மொழியுடன் (பாட எண் 73) மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ii. உரிய க.பொ.த. (உ.தர) தகுதியோடு க.பொ.த (சா.தர) தேர்வில் ஆங்கில இலக்கிய பாடத்துக்கு குறைந்தபட்சம் திறமை சித்தி பெற்றிருக்க வேண்டும்.

iii. உரிய க.பொ.த. (உ.தர) தகுதியோடு க.பொ.த (சா.தர) தேர்வில் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்தபட்சம் அதிதிறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

7. தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடநெறியில் 04.09.2020 ஆம் திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி பின்வரும் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமை தொடரொழுங்கு வரிசையில் மாவட்ட அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவதோடு, Z வெட்டுப்புள்ளி தொடரொழுங்கு வரிசை அடிப்படையில் உரிய வெற்றிட எண்ணிக்கைக்கு சமனாகுமாறு அழைக்கப்பட்ட கடைசி விண்ணப்பதாரியின் Z புள்ளியாகும்.

தொடர்புடைய தொடரொழுங்கு வரிசை பின்வருமாறு.

I. 2018 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (உ.தர) பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியோடு கூடியதாக மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

II. 2018 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (உ.தர) பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் சாதாரண சித்தியோடு கூடியதாக மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

III. 2018 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (உ.தர) பரீட்சையில் பௌதீக விஞ்ஞான பாடத்துறையில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

IV. 2018 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (உ.தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

V. 2018 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (உ.தர) பரீட்சையில் கலை, வர்த்தகம், தொழினுட்பம் மற்றும் ''பிறிதும்'' எனும் எந்த பாடத்துறையின் கீழ் யாதேனும் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

8. அதற்கிணங்க ஆங்கிலம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பாடநெறிகளின் போது ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இணைத்துக்கொள்ளப்படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் போது, அதற்காக தகைமை பெறும் இறுதி விண்ணப்பதாரர்களாகும். மேற்படி கல்வித் தகைமை வகைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுடன் கூடிய, இருப்பினும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாத அதிக Z புள்ளிகளுடன் கூடிய விண்ணப்பதாரர்கள் இருக்க முடியும்.

9.

- ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம் (ஆங்கில மொழிமூலம்), கணிதம் (ஆங்கில மொழிமூலம்), சமூக விஞ்ஞானம், விவசாயம் மற்றும் உணவுத் தொழினுட்பம் போன்ற பாடநெறிகளுக்கு பல தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் கோட்டா புள்ளிகள் வர்த்தமானி

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சேர்த்துக்கொள்ளப்படும் முழு எண்ணிக்கை சதவீதமாக கோட்டாவிற்காக ஒதுக்கப்பட்டு அதற்குச் சமமான எண்ணிக்கை வரும் வகையில் ஒவ்வொரு தகைமைகளின்கீழ் விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் Z வெட்டுப்புள்ளிக்கமைய மாவட்டமட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அப்பாடநெறிக்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் உள்ள Z வெட்டுப்புள்ளியானது ஒரே மாவட்டத்தினுள் வேறுபட்டிருக்கலாம்.

- வர்த்தமானி அறிவித்தலின் உரிய பாடநெறிக்கு ஏதேனும் மாவட்டத்திலிருந்து வெற்றிடம் காணப்படாதிருப்பின் அது "NV" – (No Vacancies) எனக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

- தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் ஏதேனும் பாடநெறிக்கு உரிய மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்காதிருப்பின் அது தொடர்பாகவும் "NV" – (No Vacancies) எனக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

10. **பௌத்த தர்ம பாடநெறிக்காக சங்கைக்குரிய தரப்பினர் உரிய எண்ணிக்கையில் ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் மாவட்ட அடிப்படையில் எஞ்சிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக பிக்குகள் அல்லாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய முதலில் நடைபெறும் சங்கைக்குரியவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நடந்து முடியும் வரை பிக்குகள் அல்லாத விண்ணப்பதாரர்களுக்குக்கான Z வெட்டுப்புள்ளியை வெளியிட முடியாது என்பதால் அந்த தரவு முன்வைக்கப்படவில்லை.**

11. கத்தோலிக்க / கிறிஸ்தவ சமய பாடநெறிகளுக்கு மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 40% ஆனது சங்கைக்குரிய தரப்பினர் ஆட்சேர்க்கப்பட வேண்டியுள்ளமையால், அதற்குரிய Z வெட்டுப்புள்ளியில் அது செல்வாக்கு செலுத்த முடியும்.

12. **வெட்டுப்புள்ளி Z பெறுமானம் தீர்மானிக்கப்படும்** போது விண்ணப்பதாரரின் க.பொ.த (சா.தர) தகைமை, ஆங்கிலப் பாடநெறி தவிர வேறு எந்தப் பாடநெறிக்கும் கவனத்திற் கொள்ளப்படாது என்பதோடு, தொடரறா முறையியல் (Online system) சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்க.

13. அதன்படி, மேற்கூறிய அனைத்து விடயங்களின் பிரகாரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாத விண்ணப்பதாரிகள் தமது உண்மை நிலையை விளங்கிக்கொள்ள வேண்டியதோடு, மிகவும் இன்றியமையாத விடயம் தவிர்த்து எளிமையாக விளங்கிக் கொள்ள வேண்டிய விடயங்களுக்கு மீண்டும் மீண்டும் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.